## அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)

**தாந்தோணிமலை, கரூர்-639 005.**

(A-கிரேடு தகுதி பெற்ற முதல் நிலைக் கல்லூரி)

(திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

# தகவலேடு (PROSPECTUS) - 2017 - 2018

## 1. விண்ணப்பம் செய்ய கடைசி நாள் 30-6-2017 வெள்ளிக்கிழமை மாலை 5-00 மணி

### 2. விண்ணப்பக் கட்டணம்

அ முதுநிலை வகுப்புக்குரிய விண்ணப்பக் கட்டணம் ரூ. 58/- பதிவுக்கட்டணம் ரூ. 2/- ஆக ரூ. 60/-

ஆ தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு ஒரு விண்ணப்பம் மட்டும் இலவசமாக வழங்கப்படும். சாதிச் சான்றிதழின் ஜெராக்ஸ் நகலைக் கொடுத்து, இலவச விண்ணப்பம் பெறவேண்டும்.

### கலந்தாய்வு தேதி மற்றும் விபரம் :

பட்ட மேற்படிப்பு அனைத்து பாடங்களுக்கும் நடைபெறும் கலந்தாய்வில் பங்குகொள்ள விரும்பும் மாணவ, மாணவியர்கள் இந்த தகவலேட்டினை அழைப்புக்கடிதமாகக் கொண்டு கீழ் கண்ட தேதியில் காலை 9–30 மணிக்கு மூலச்சான்றிதழ்கள், அதன் இரு நகல்கள் மற்றும் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்கள் 2 மற்றும் உரிய கட்டணத்துடன் கட்டாயமாக பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் கலந்துகொள்ளவேண்டும்.

கலந்தாய்வு தேதி

**பட்டமேற்படிப்பு அனைத்து பாடங்களுக்கும் : 05-07-2017**

| பட்டமேற்படிப்பு முதன்மைப் பாடங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | எம்.எஸ்.சி., கணிதம் | (ஆ.வ.) | 8. | எம்.ஏ., தமிழ் | |
| 2. | எம்.எஸ்.சி., தாவரவியல் | (ஆ.வ.) | 9. | எம்.காம்., வணிகவியல் | (ஆ.வ.) |
| 3. | எம்.எஸ்.சி., விலங்கியல் | (ஆ.வ.) | 10. | எம்.ஏ., வரலாறு | (ஆ.வ.) |
| 4. | எம்.எஸ்.சி., கணிப்பொறி அறிவியல் | (ஆ.வ.) | 11. | எம்.ஏ., ஆங்கிலம் | |
| 5. | எம்.எஸ்.சி., இயற்பியல் | (ஆ.வ.) | 12. | எம்.ஏ., பொருளியல் | (ஆ.வ.) |
| 6. | எம்.எஸ்.சி., புவியியல் | (ஆ.வ.) | | | |
| 7. | எம்.எஸ்.சி., வேதியியல் | (ஆ.வ.) | | | |

## 4. விண்ணப்பிக்கும் முறை

பட்ட மேற்படிப்பிற்கான விண்ணப்பங்களை பாரதிதாசன் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புத் தேர்வு முடிவுகள் வெளியான பத்து நாட்களுக்குள் முதல்வருக்கு அனுப்ப வேண்டும். பட்ட மேற்படிப்பிற்கான விண்ணப்பங்களை கல்லூரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட் விண்ணப்ப படிவங்களை உரிய சான்றிதழ்களுடன் முதல்வருக்கு அனுப்ப வேண்டும்.

1. பட்டப் படிப்பு கல்வி மதிப்பெண் பட்டியல்
2. சாதிச் சான்றிதழ்
3. மாற்றுச் சான்றிதழ்
4. தன் முகவரியிட்ட அஞ்சலட்டை ஒன்று
5. ஆதார் அட்டை நகல் ஒன்று

பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய/சீர் மரபினர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் (B.C., B.C.(M) M.B.C., D.N.C., S.C., S.C.(A.) and S.T., ) விண்ணப்பதாரர்கள் ஒதுக்கப்பட்ட (Reserve) இடங்களுக்கு உரியவர் எனக் கருதப்பட வேண்டுமானால் விண்ணப்பத்தில் உரிய இடங்களில் பூர்த்தி செய்யவேண்டும். சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். பள்ளி மாற்றுச் சான்றிதழில் உள்ள சாதியின் பெயரும், சாதிச் சான்றிதழில் உள்ள சாதியின் பெயரும் ஒன்றாக இருந்தால் மட்டுமே கல்லூரியில் சேர்க்கப்படுவர்.

## 5. விண்ணப்பதாரரின் தேர்வு

அரசு ஆணையின்படி விண்ணப்பதாரர்கள் பட்டப்படிப்பில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் அரசு அறிவித்துள்ள இடஒதுக்கீடு அடிப்படையில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளுக்கு தேர்வு செய்யப்படுவர். மதிப்பெண் தரவரிசைப் பட்டியல் (Rank List) அடிப்படையில் நேரடி சேர்க்கை நடைபெறும். கலந்தாய்வில் கலந்துகொள்ளும்போது மூலச் சான்றிதழ்கள் மற்றும் அவற்றின் இரண்டு ஜெராக்ஸ் நகல்கள் கொண்டுவரவேண்டும். பாஸ்போர்ட் சைஸ் அளவுள்ள இரண்டு புகைப்படங்கள் கொண்டுவரவேண்டும். மதிப்பெண் பட்டியல் தவறு எனக் கண்டுபிடிக்கப்பட்டால் கல்லூரி சேர்க்கையை இரத்து செய்வதுடன் மாணவர் மீது குற்றவியல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

## 6. கல்வி உதவித் தொகை :

கல்வி உதவித் தொகை பெறுவதற்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினைச்சார்ந்த மாணவ, மாணவியரின் குடும்ப வருமானம் ரூ. 2.50 லட்சத்திற்கு குறைவாகவும், பிற்பட்ட வகுப்பினைச்சார்ந்த மாணவ, மாணவியரின் குடும்ப வருமானம் ரூ. 2 லட்சத்திற்கு குறைவாகவும் மற்றும் மிகவும்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியர்கட்கு வருமான வரம்பின்றி அனைவருக்கும் உதவித்தொகை பெற தகுதியுள்ளமையால் அனைவரும் கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பிக்கலாம் மேலும் அதற்கான வருமானச்சான்று வட்டாச்சியரிடமிருந்து பெற்று உடன் சமர்பிக்கவேண்டும்.

விவசாய தொழிலாளர் நலவாரியம் மூலம் வழங்கப்படும் உதவி தொகைக்கு சம்பந்தப்பட்ட வட்டாச்சியரிடம் மாணவ, மாணவியர்கள் விண்ணப்பிக்கவும்.

## 7. கல்லூரிக் கட்டண விபரங்கள்

கல்லூரியில் சேர அனுமதித்தபோது ஒவ்வொரு மாணவரும் செலுத்த வேண்டிய கட்டணங்கள் :

| கல்லூரி சிறப்புக் கட்டணம் ஆண்டிற்கு | ரூ. | பல்கலைக்கழகக் கட்டணம் ஆண்டிற்கு | ரூ. | இதர கட்டணம் ஆண்டிற்கு | ரூ. |
|---|---|---|---|---|---|
| **ஆய்வகக் கட்டணம்** | | பல்கலைக்கழக விளையாட்டு (இரண்டு ஆண்டுக்கு) | 200/- | செஞ்சிலுவை | 20/- |
| எம்.எஸ்சி. (கணிதம் தவிர) | 30/- | இளைஞர் மேம்பாடு | 100/- | **சேர்க்கையின் போது** | |
| **தன்வைப்பு கணக்கு** | | | | என்.எஸ்.எஸ். | 10/- |
| உடற்பயிற்சி | 100/- | குழுகாப்பீட்டுத் தொகை | 25/- | கொடி நாள் | 5/- |
| மாணவர் பேரவை | 25/- | **சேர்க்கையின் போது** | | பெற்றோர் ஆசிரியர் சங்கம் | 500/- |
| ஆண்டு மலர் | 20/- | மெட்ரிகுலேசன் பிற பல்கலைக் கழகம் | 100/- | | |
| நூலகம் | 10/- | | | மாணவரின் கல்லூரி அடையாள அட்டை | 50/- |
| நாட்காட்டி | 10/- | | | | |
| எழுதுபொருள் | 50/- | P.G. பதிவுக் கட்டணம் | 200/- | | |
| நுண் கலை | 10/- | | | | |
| பட்டமளிப்பு விழா | 25/- | அறிந்தேற்பு பிற பல்கலைக் கழகம் | 750/- | | |
| கணினி அறிவியல் மாணவர்களுக்கு எழுதுபொருள் | 100/- | வளர்ச்சிக் கட்டணம் | 40/- | | |
| Audio & Visual | 10/- | | | | |
| **சேர்க்கையின்போது** | | பண்பாட்டுக் கட்டணம் | 50/- | | |
| சேர்க்கைக் கட்டணம் | 5/- | | | | |

மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கல்லூரி சிறப்பு கட்டணம் கிடையாது.

கட்டணங்கள் மாறுதலுக்குட்பட்டது.

## 8. மாணவர் விடுதிகள் :

அரசு கல்லூரி மாணவர்களுக்கென்று ஆதிதிராவிட நலத்துறை விடுதியும், மிகவும் பிற்படுத்தபட்டோர் மற்றும் பிற்பட்டோர் நலத்துறை நடத்தும் மாணவர் விடுதிகளும், மாணவியர் விடுதிகள் இரண்டும் உள்ளன. இதன் விபரங்களை அவ்விடுதிக் காப்பாளர்களிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

## 9. பொதுக்குறிப்புகள் :

கல்லூரியில் சேர்வதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவரும் உடனே கல்லூரி அலுவலகத்தில் கட்டணங்களைச் செலுத்திவிடவேண்டும். இல்லையேல் சேர்க்கை மறுக்கப்படும். சேர்க்கை குறித்து எவ்வித கடித தொடர்பும் விண்ணப்பதாரர்களுடன் மேற்கொள்ளப்படமாட்டாது.

இடம் : கரூர்.

முதல்வர்,
அரசு கலைக் கல்லூரி,
கரூர்.